<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.</u>

முன்னிலை:- திருமதி **R.D.** குருலட்சுமி, M.A.,M.L., PGDI & CL.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவர் ஆண்டு 2055 குரோதி வருடம் ஆடித் திங்கள் 7-ம் நாள்
2024ம் ஆண்டு ஜுலைத் திங்கள் 23 ஆம் நாள் செவ்வாய்க் கிழமை

இடைநிலை மனு எண்.2/2023
இன்
அசல் வழக்கு எண்.41/2023
CNR.No.TNTR21-000041-2023
...

ராஜசேகர் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. பிஷப், தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், சென்னை.
2. சேகரத் தலைவர் மற்றும் தேர்தல் அதிகாரி
அருட்தந்தை L. கிதியோன் தினகரன்,
சி.எஸ்.ஐ, மத்தூர் குருசேகரம் பொறுப்பாளர்,
3. S. பிரான்சிஸ், செயலாளர், சி.எஸ்.ஐ, மத்தூர் நேச மேய்ப்பர் ஆலயம், மத்தூர்.
... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 08.07.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் S. முருகேசன், K. பாஸ்கர், R. சரிதா, D. சந்தோஷ் ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் M. வீரராகவன், N. இளவரசன், O.Y.சரத்குமார் ஆகியோர்கள் முன்னிலையாகியும், மனுதாரர் தரப்பு வாதங்களைக் கேட்டும், எதிர்மனுமதாரர் தரப்பில் பகுதி வாதம் கேட்கப்பட்டும், உரிய வாய்ப்பு அளித்தும் எதிர்மனுதாரர் வாதுரைக்கு தயாராக இல்லாததால் எதிர்மனுதாரர் தரப்பு கூடுதல் வாதம் முடிக்கப்பட்டும், வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இவ்வழக்கில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

<u>உத்தரவு</u>

எதிர்மனுதாரர்கள், பிரதிவாதிகள் ஆலயத்தில் 27.08.2023ம் தேதியோ அல்லது வருங்காலத்தில் வேறு எந்த தேதியிலோ தேர்தல் நடத்துவதற்கு, இவ்வழக்கு முடியும் வரை தாற்காலிக உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1 & 2ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1.** <u>மனுவின் சுருக்கம்:-</u>

(அ) மனுதாரர் கதவு எண்.6/162, பஜனை கோயில் தெரு, மத்தூர் காலனி, திருத்தணி என்ற முகவரியில் நிரந்தரமாக வசித்து, தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம் மற்றும் மத்தூர் நேச மேய்ப்பர் தேவாலயத்தின் செயல்பாடுகளில் பங்கேற்று வருகிறார். 2ம் பிரதிவாதியால், சி.எஸ்.ஐ, மத்தூர் குருசேகரத்தில்,

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.07.23 17:26:25 -0600

அலுவலக பொறுப்பாளர்களை தேர்ந்தெடுக்க தேர்தலை நடத்துவதற்கான உறுப்பினர்கள் பெயர் பட்டியியலிருந்து, மனுதாரர் பெயரை சட்டவிரோதமாக நீக்கியுள்ளார். சி.எஸ்.ஐ, மத்தூர் குருசேகரமானது, A.M.பேட்டை, R.S.மங்காபுரம், சிங்கராஜபுரம், மங்காபுரம் ஆகிய அருகிலுள்ள கிராமங்களிலுள்ள உட்குழுக்களை சேர்ந்தது ஆகும். 2ம் பிரதிவாதி 2023ம் ஆண்டு தேர்தல் நடத்த வேண்டி தன்னிச்சையாக உறுப்பினர்கள் பட்டியல் தயாரித்துள்ளார். உண்மையில் 366 உறுப்பினர்கள் உள்ளனர். ஆனால் 92 நபர்கள் அடங்கிய உறுப்பினர்கள் பட்டியல் மட்டுமே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இதில் இயற்கை நீதிக்கு எதிராக அங்குள்ள 2/3 உறுப்பினர்களது உரிமை நிராகரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) இதுகுறித்து மனுதாரர் அளித்த முறையீடுகள் எதிர்மனுதாரரின் காதுகளுக்கு எட்டவில்லை. பிரதிவாதி 27.08.2023ம் தேதி தேர்தல் நடத்தவுள்ளார். சென்னை, பிஷப் அலுவலகத்தில் 08.08.2023 தேதியிட்டு மனுதாரர் தனது உரிமைகளைப் பாதுகாக்க வேண்டி கொடுத்த முறையீடுகள் இன்றுவரை எந்த பலனும் அளிக்கவில்லை. மனுதாரர் தனது கைபேசியிலிருந்து 2ம் பிரதிவாதி கைபேசி எண்ணிற்கு அழைத்தபோது 2ம் பிரதிவாதி, விடுப்பட்ட உறுப்பினர்கள் பெயர்களை இறுதிப் பட்டியலில் சேர்ப்பதாக கூறியிருந்தார். ஆனால் 05.08.2023 தேதியிட்ட உறுப்பினர்கள் பட்டியல் 366 உறுப்பினர்கள் சேர்க்கப்படாமல் ஒருதலைப்பட்சமாக 2ம் பிரதிவாதியால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் பெயர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருந்தது. இதுகுறித்து மனுதாரர் விசாரிக்கையில், 2ம் பிரதிவாதி மிரட்டியதால், மனுதாரர் தனது தினசரி அலுவல்களை கூட செய்ய முடியாத நிலையில் உள்ளார்.

(இ) மனுதாரர் 7 ஆண்டுகளாக செயற்குழு உறுப்பினராக பதவியிலிருந்ததாகவும் எதிர்மனுதாரர்கள் மனுதாரரின் முறையீடுகளை நிராகரித்து, ஓட்டு அளிக்கவோ அல்லது தேர்தல் நடத்தவோ தகுதியுள்ள நபர்கள் பெயர்கள் இல்லாமல் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே தேர்தல் நேர்மையாக நடக்காது. இது குறித்து மனுதாரர் மற்றும் பிற உறுப்பினர்கள் கொடுத்த முறையீடுகளும் பலன் அளிக்கவில்லை. 27.08.2023ம் தேதி நடக்கவிருக்கும் தேர்தல் சட்ட விரோதமானது. எனவே, 06.08.2023ம் தேதி அன்று எதிர்மனுதாரரால் அறிவிக்கப்பட்ட தேர்தல் தகுதியுள்ள உறுப்பினர்களை சேர்க்காமல் நடத்தப்படும் 27.08.2023 தேதியிட்ட தேர்தல் சட்ட விரோதமானது என விளம்புகை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. எனவே 27.08.2023 தேதியிட்டு தேர்தல் நடத்த கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மறுப்புரையின் சுருக்கம்:-</u>

(அ) மனுதாரர், தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயத்தை சேர்ந்த சி.எஸ்.ஐ மத்தூர் குருசேகரத்தின் உறுப்பினர் என்பதும் பொய்யானது. மேற்படி சி.எஸ்.ஐ மத்தூர் குருசேகரத்தில் ராஜசேகர் என்ற பெயர் இல்லை. மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்து இடைக்கால உறுத்துக் கட்டளைப் பரிகாரம் கோர, தேர்தலை நிறுத்தி வைக்க எந்த அருகதையும் இல்லை. மனுதாரர் மேற்படி தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயத்தை சேர்ந்த சி.எஸ்.ஐ மத்தூர் குருசேகரத்தின் செயல்பாடுகளில் ஈடுபாடு கொண்டவர் என்பதும் நிரந்தர முகவரியில்

R D GURULAKSHMI
Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.07.23 17:26:53 -0600

வசிக்கும் மனுதாரர் அவரது குடும்ப உறுப்பினர்கள் பெயரை சட்ட விரோதமாக விடுப்பட்டு உறுப்பினர்கள் பெயர் பட்டியல் வெளியிடப்பட்டிருப்பதாக கூறுவது பொய். 2023 முதல் 2026ம் காலத்திற்கான தேர்தல் அட்டவணை 06.08.2023ம் தேதி வெளியிட்டப்பட்டு முதல் வாக்களிப்பவர் பெயர் பட்டியல் அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டது. அதன்பின்பு வாக்களிக்க தகுதிவாய்ந்த அனைத்து உறுப்பினர்களின் பெயர்களும் பரிசீலனை செய்யப்பட்டு, 2வது வாக்காளர் பட்டடியல் 09.08.2023ம் தேதி அறிவிப்பு பலகையில் வெளியிடப்பட்டது.

(ஆ) மனுதாரர் பெயர் மேற்படி அறிவிப்பு பலகையில் இல்லை என்ற நிலையில் அவரது பெயர் உறுப்பினர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது என கூற அவருக்கு அருகதை இல்லை. மனுதாரர் தன் பெயரை சேர்க்க 09.08.2023ம் தேதிக்குள் இந்த பிரதிவாதியிடம் முறையிட்டிருக்க வேண்டும். பிரமாணப் பத்திரம் பாரா 3-ல் கூறியுள்ள விவரங்கள், இந்த எதிர்மனுதாரர், மனுதாரரின் மனுவுக்கு உரிய பரிசீலனை அளிக்கவில்லை என்பது பொய். மனுதாரர் எந்த மனுவும் அளிக்கவே இல்லை. எதிர்மனுதாரர் ஒருதலைப்பட்சமாக 2023ம் ஆண்டுக்கான தேர்தல் நடத்த உறுப்பினர்கள் பட்டியலில் 366 உறுப்பினர்களில் 92 நபர்களை மட்டும் அதாவது 2/3 நபர்களை நீக்கி இயற்கை நீதிக்கு எதிராக வெளியிட்டதாக கூறுவது பொய். தென்னிந்திய மறைமாவட்ட தேவாலயம், மெட்ராஸ்-ன் அமைப்பு மற்றும் உப விதிகளுக்கு உட்பட்டு வாக்காளர் பட்டியல் தயார் செய்யப்பட்டு வெளியிடப்பட்டது. மனுதாரர் மனு சட்டப்படியும் நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. 08.08.2023 தேதியிட்டு சென்னை பிஷப் அலுவகத்தில் மனு கொடுத்தும் எந்த பலனும் இல்லை என கூறியிருப்பது பொய்.

(இ) 20.08.2023ம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் இறுதிப் பட்டியல் போட்டியின்றி தேர்நதெடுக்கப்பட்டதால் 27.08.2023ம் தேதி தேர்தலே நடைபெறவில்லை. மேற்கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் அல்லது சி.எஸ்.ஐ மத்தூர் குருசேகரம் உறுப்பினர்கள் மீது ஏதேனும் குறைபாடு இருக்கும்பட்சத்தில் அவர் தென்னிந்திய மறைமாவட்ட தேவாலயம், மெட்டாஸ் அரசியலைப்பு மற்றும் உப விதிகளுக்கு உட்பட்டு உரிய அதிகாரிகளிடம் சட்டத்தின்பால் முறையிட்டிருக்க வேண்டும். இந்நீதிமன்றத்தில் உரிமையில் வழக்கு தாக்கல் செய்ய மேற்படி சட்டத்தின்பால் இடமில்லை. மனுதாரர் உண்மை விவரங்களை மறைத்து தேவையற்ற மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரருக்கு முதல் நோக்கு வழக்கோ சமநோக்கு நிலையோ இல்லை. மனுதாரரின் கைபேசி வாயிலான முறையீடுகளை பிரதிவாதி பரிசீலனை செய்யவில்லை என்பதும் 366 உறுப்பினர்களில் 92 நபர்கள் பெயர் மட்டுமே அடங்கிய பட்டியல் 05.08.2023-ல் வெளியிடப்பட்டது என்பதும் பொய். எதிர்மனுதாரர் மிரட்டியதாக கூறப்பட்டிருப்பது சுத்த பொய். மனுதாரர் 7 வருடங்களுக்கு செயற்குழு உறுப்பினராக இருந்ததாகவும், மனுதாரரின் முறையீடுகளை எதிர்மனுதாரர்கள் நிராகரித்தாகவும் மனுதாரரை சேர்க்காமல் தேர்தல் நடத்த முயற்சித்தாகவும் மனுதாரர், பிஷப்பிடம் அளித்த முறையீட்டிற்கு எந்த பலனும் அளிக்கவில்லை என்பதும் பொய். எனவே மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

**3.** <u>தீர்வுக்குரிய பிரச்சனை **:-**</u>

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.07.23 17:27:30 -0600

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**4.** தீர்வு:-

மனுதாரர் தரப்பில் மொத்த உறுப்பினர்களை சேர்க்காமல் வாக்காளர் பட்டியல் வெளியிப்பட்டுள்ளது இயற்கை நீதிக்கு எதிரானது என்றும் எனவே 27.08.2023 தேயிட்டு தேர்தலை நடத்துவதை தடை செய்ய இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்க வேண்டிய அவசியம் என கூறி வாதிடப்பட்டது. இவ்வழக்கில் எதிர்மனுதாரர் தனது மறுப்புரையில் ஏற்கனவே போட்டியின்றி நிர்வாக குழு உறுப்பினர்கள் தேர்ந்தேடுக்கப்பட்டு எ.ம.சா.ஆ.2 பட்டியல் 27.08.2023 தேதியே வெளியிட்டதாகவும் எனவே 27.08.2023ம் தேதியிட்டு தேர்தலே நடத்தப்படவில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

மேற்படி பட்டியல் மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டு, இவ்வழக்கில் ஏற்கனவே போட்டியின்றி நிர்வாக குழு தெரிந்தெடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் தேர்தலை நடத்த தடையுத்தரவு கோர இயலாது என இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் போட்டியின்றி நிர்வாக குழு தெரிந்தெடுக்கப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில் இம்மனு பலனற்றது என இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

இறுதியாக இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2024 ஆம் ஆண்டு ஜுலைத் திங்கள் 23 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.07.23 17:25:59 -0600

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

மனுதாரர் தரப்பு சாட்சி:- இல்லை

மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | -- | தூய மத்தேயு ஆலயம், திருத்தணி சேகரக்குழு தேர்தல் - 2017 - 2020, முதல் வாக்காளர் பட்டியல், மத்தூர் - நகல் |
| 2. | ம.த.சா.ஆ.2 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், திருத்தணி குருசேகரம், உறுப்பினர் அட்டை - 2020 - அசல் |
| 3. | ம.த.சா.ஆ.3 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், திருத்தணி குருசேகரம், உறுப்பினர் அட்டை - 2021 - அசல் |
| 4. | ம.த.சா.ஆ.4 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், திருத்தணி குருசேகரம், உறுப்பினர் அட்டை - 2023 - அசல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், திருத்தணி குருசேகரம், உறுப்பினர் அட்டை - 2022 - அசல் |
| 6. | ம.த.சா.ஆ.6 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், உறுப்பினர் பெயர் பட்டியல் - நகல் |

| | | | |
|---|---|---|---|
| 7. | ம.த.சா.ஆ.7 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், உறுப்பினர் சந்தா விபரம் - நகல் |
| 8. | ம.த.சா.ஆ.8 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், தேர்தல் போட்டியிடுபவர், வாக்களிப்பவர் பெயர் பட்டியல் - நகல் |
| 9. | ம.த.சா.ஆ.9 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், தேர்தலில் தேர்வு செய்யப்பட வேண்டிய அங்கத்தினர் - நகல் |
| 10. | ம.த.சா.ஆ.10 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயத் தந்தை அவர்களுக்கு, சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகர இறைமக்கள் அனுப்பிய மனு - நகல் |
| 11. | ம.த.சா.ஆ.11 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், தேர்தலில் போட்டியிட தகுதியுள்ள முதல் வேட்பாளர் பெயர் பட்டியல் - நகல் |
| 12. | ம.த.சா.ஆ.12 | -- | மனுதாரரின் ஆதார அட்டை - நகல் |
| 13. | ம.த.சா.ஆ.13 | -- | தென்னிந்திய திருச்சபை, சென்னை பேராயம், மத்தூர் குருசேகரம், தூய யோவான் ஆயலம் - A.M.பேட்டை சந்தா விவரப் பெயர்கள் - நகல் |

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :- இல்லை

எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:-

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.ம.த.சா.ஆ.1 | -- | சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், முதல் வாக்காளர் பெயர் பட்டியல் - அசல் |
| 2. | எ.ம.த.சா.ஆ.2 | -- | சி.எஸ்.ஐ, நேச மேய்ப்பர் தேவாலயம், மத்தூர் குருசேகரம், தேர்தலில் போட்டியிட இறுதி வேட்பாளர் பெயர் பட்டியல் - அசல் |

R D GURULAKSHMI

Digitally signed by R D GURULAKSHMI
Date: 2024.07.23 17:28:09 -0600

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.